




# ஹர ஹர சங்கரா

FREE COPY
Dec - 2024
Vol. 4 - ISSUE 02



# KODAMBAKKAM TIMES

# திருப்பாவை வேதங்களுக்கெல்லாம் வித்து

திருப்பாவை என்பதை எப்படி வேதங்களுக்கெல்லாம் வித்து (விதை) என்று சொல்கிறார்கள் என்பதைத்தான் இன்று பார்க்கப்போகிறோம்.

"வேதம் எதற்காக வந்தது? தனக்கு ஒருவன் தீங்கு செய்து விட்டால், அவனை எப்படி கையாள வேண்டும் என்பதை வேதம் சொல்கிறது. வாழ்க்கையில் சுகமாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் வேதம் சொல்லிக் கொடுக்கிறது. மனிதர்களுக்கு என்னென்ன வேண்டுமோ, அத்தனையையுமே சொல்லிக் கொடுக்கிறது வேதம். தாயார்-தகப்பனார்கள் தம் குழந்தைகளிடம் காட்டும் அன்பைவிட, அதிக மடங்கு அன்பை, ஆசையை வேதம் நம் ஒவ்வொருவரிடமும் காட்டுகிறது.



ஐஸ்வர்யம் வேண்டுமா? இந்த யாகம் செய்யுங்கள், மோட்சம் வேண்டுமா? பக்தி பண்ணுங்கள் என்று சொல்லிக் கொடுக்கிறது. ஒரு பள்ளியில் படிக்கும் குழந்தையிடம் அதன் பெற்றோர்கள், "கண்ணா இந்த வீடியோ கேம்ஸ் நல்லா விளையாடு என சதா சர்வ காலமும் அந்தக் குழந்தையை வீடியோ கேம்ஸ் ஆடவும், டிவி பார்க்கவுமே சொல்லிக் கொடுத்து விட்டு, பாடப் புத்தகங்களை அதனிடம் நீட்டினால் அது எப்படி படிக்காதோ அதைப்போலத்தான் உலகியல் இன்பங்களில் மட்டுமே மனத்தை நாம் செலுத்தி வந்தால் "மோட்சம்" என்பது நமக்கு கிடைக்காது என்பதைத்தான் வேதமும் சொல்கிறது, திருப்பாவையும் சொல்கிறது.

பொதுவாகவே, எந்த தாயாருக்கும் தன் குழந்தையின் மீது அளவுக்கதிகமான பாசம் என்பது இருக்கும். அந்தக் குழந்தை மண்ணை தின்றால் கூட அது சிறிது நேரம் சந்தோஷமாக மண்ணை சாப்பிடட்டும் என விட்டு விடுவாள். அதன் பிறகு, அதற்கு கசப்பான கஷாயத்தை கொடுப்பாள். ஆக, நம்மையும் இப்படித்தான்

மாற்றுகிறார் இறைவன். இந்தக் கோயிலுக்கு போனால் இந்த பலன் கிடைக்கும் என்பதால் ஒருவன் விடாமல் தினமும் கோயிலுக்கு போகிறான், அவன் நினைத்த பொருளும் அவனுக்கு கிடைத்து விடுகிறது, ஆனால் தினம் கோயிலுக்கு வந்து கொண்டிருந்ததால் அவனுக்கு கிடைத்த பொருளின் மீது பற்று போய், கடவுளின் மீது பற்று ஏற்பட்டுவிடுகிறது. எது உண்மையாக வேண்டும்? உலகியல் இன்பமா அல்லது மோட்சமா என தீர்மானிக்கக்கூடிய மனநிலை அவனுக்கு தானாகவே வந்துவிடுகிறது.

எல்.கே.ஜி. படிக்கும் ஒரு குழந்தையிடம் அக்குழந்தையின் அப்பா, நீ இந்த வாட்டி ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கினா, நான் உனக்கு சைக்கிள் வாங்கி தரேன்னு சொல்லுவார். சைக்கிளுக்கு ஆசைப்பட்டு அந்த குழந்தையும் நன்றாக படித்து ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கிவிடுகிறான். இதே Motivation என்பதை அந்த தந்தை அந்த குழந்தை காலேஜ் போகும் வரை கொடுப்பார். அதன்பிறகு அந்த குழந்தைக்கே தான் நல்ல வேலையில் சென்று அமர வேண்டும் என்ற குறிக்கோள் ஏற்பட்டு, நல்ல வேலைக்குப் போய்விடும். ஆக பகவான் நமக்கும் இப்படித்தான் Motivation கொடுக்கிறார். பகவானை அடைய பகவானே நமக்கு கொடுக்கும் Motivation தான் சாஸ்திரம். அடுத்தவனை அழிக்கக்கூடாது என்ற எண்ணம் முதலில் வரும். சொர்க்கத்தில் இடம் கிடைத்தால் கூட நமக்கு வேண்டாம் ஏனென்றால் நாம் செய்திருக்கும் புண்ணியத்துக்கு ஏற்ப சில மணி நேரங்கள்தான் அங்கே இருக்க முடியும். அதன்பிறகு இறைவன் நம்மை கீழே பிடித்து தள்ளிவிடுவார் என்ற பயம் வரும். நிலையான இன்பம் என்பது பகவானின் திருவடி ஒன்றுதான், அது பக்தி பண்ணால் கிடைத்துவிடும் என்பதைத்தான் திருப்பாவையில் தம் 30 பாசுரங்களாலும் ஆண்டாள் சொல்லி இருக்கிறாள். அதையே தான் வேதங்களும் சொல்கின்றன.

எந்த ஒரு விசேஷம் நடந்தாலும் கடைசியில் ஆரத்தி எடுத்து மங்களம் பாடி வாழ்த்துவது போல ஒவ்வொரு பாசுரத்தின் கடைசி அடியிலும் நம்மை எல்லாம் வாழ்த்துவது போல வாழ்த்துகிறாள் ஆண்டாள். "பாரோர் புகழ படிந்து, நீங்காத செல்வம் நிறைந்தேலோ". இப்படி நம் நல்வாழ்வுக்கு வாழ்த்துப் பாடும் திருப்பாவையை நாமும் தினமும் சொல்லி இறைவனின் மீது நீங்காத பக்தி செய்வோமாக.

# உங்களுக்கு தெரியுமா?

**1. எமனுக்கு ஆச்சரியமான விஷயம்**

நாராயணா என்ற நாமம் இருக்கிறது, அதை சொல்ல நாக்கும் நம் வசம் உள்ளது, அப்படி இருந்தும் அதை சொல்லாமல் கோரமான நரகத்தில் விழுகின்றார்களே, இது ஏன் என்று எமன் சித்திரகுப்தனை கேட்க, இருவருக்கும் காரணம் புரியாமல் இதுவும் ஒரு ஆச்சரியமான விஷயம் என்றான் எமன்.

**2. திருவரங்கன் திருக்கையில் செங்கோல்**

திருவரங்கத்தில் திருவரங்கன் திருக்கைகளில் செங்கோல் இருப்பது உங்களுக்கு தெரியுமா. செங்கோலுடைய திருவரங்க செல்வனார் என்று ஸ்ரீ ஆண்டாளும் தம் நாச்சியார் திருமொழியில் அருளிச்செய்துள்ளார். இந்த செங்கோல் ஆனது உத்ஸவர் நம்பெருமாள் புறப்பாட்டில் அவர் திருக்கைகளில்

இருக்கும். புறப்பாடு முடிந்தவுடன் மூலவர் படுக்கையாகிய ஆதிசேஷன் மேல் வைத்துவிடுவர்.

அதேபோல் ஸ்ரீபெரும்புதூரில் ஸ்ரீ ராமானுஜர் புறப்பாட்டில் திரிதண்டம் உத்ஸவர் இடம் இருக்கும். புறப்பாடு முடிந்தவுடன் மூலவரிடம் வந்து விடும்.

**3. நாலுகவி பெருமாள்**

ஸ்ரீதிருமங்கையாழ்வாருக்கு நாலுகவி பெருமாள் என்று பெயர் உண்டு. நாலு கவி என்னென்ன?
ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, விஸ்தாரகவி ஆகும்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த சிறியதிருமடல், பெரிய திருமடல் இரண்டும் ஆசுகவி, திருக்குறுந்தாண்டகம் மற்றும் திருநெடுந்தாண்டகம் இவை இரண்டும் மதுரகவி, திருவெழுகூற்றிருக்கை சித்ரகவி, பெரிய திருமொழி விஸ்தாரகவி.

**4. சரமசுலோகம்**

சரமசுலோகம் ஒன்று இல்லை, இரண்டு இல்லை, மூன்று சரமசுலோகங்கள் உள்ளன. கிருஷ்ண சரமசுலோகம், ராம சரமசுலோகம், வராக சரமசுலோகம்.

ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த நாச்சியார் திருமொழியில் தாமுகக்கும் தன் கையில் சங்கமே போலாவோ என்ற பதிகத்தில் உண்ணாது, உறங்காது பாசுரம் ராம சரமசுலோகத்தை சொல்கிறது. பாசி தூர்ந்து கிடந்த பாசுரம் வராக சரமசுலோகத்தை சொல்கிறது. செம்மையுடைய திருவரங்கர் பாசுரம் கிருஷ்ண சரமசுலோகத்தை சொல்கிறது.

**5. கருடனே பெரியாழ்வார்**

மகாபாரத யுத்தத்தில் அர்ச்சுனன் பயன்படுத்திய தேர் தான் கருடன். அதாவது பெரிய திருவடியாகிய கருடனே அர்ச்சுனன் தேராக மாறியிருந்தார். கண்ணன் அர்ச்சுனனுக்கு கீதை சொன்னபோது தேராக இருந்த கருடனும் கீதையை கேட்டார். அந்த கருடனே இப்போது பெரியாழ்வாராகவும் அவதாரம் செய்திருக்கிறார். அதனால் தான் ஆண்டாள் பாசுரத்தில் மெய்ம்மை பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர் என்று அருளிச் செய்யப்பட்டது. மெய்ம்மை பெருவார்த்தை என்றால் பகவத்கீதை.

**6. ஸ்ரீவைஷ்ணவனுக்கு சிறந்த கைங்கர்யம்**

ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு சிறந்த தொண்டு எது என்றால் எம்பெருமானுக்கு மங்களாசாசனம் பண்ண தன்னைப் போல ஒரு பாகவதரை உருவாக்குவதே.

**7. இராப்பத்து பகல்பத்து உத்ஸவங்கள்**

திருவரங்கத்தில் முதல் முறையாக இராப்பத்து உத்ஸவம் ஆரம்பித்து வைத்தது ஸ்ரீ திருமங்கையாழ்வார். அதேபோல் பகல்பத்து உத்ஸவம் ஆரம்பித்து வைத்தது

ஸ்ரீமந் நாதமுனி ஸ்வாமி.

**8. அண்டக்குலத்துக்கதிபதி**

ஈரேழு பதினான்கு உலகமும் சேர்ந்து ஒரு அண்டம். இப்படி கோடிக்கணக்கான அண்டங்கள் ஸ்ரீமன் நாராயணன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. எல்லா அண்டங்களுக்கும் ஒரே அதிபதி ஸ்ரீமன் நாராயணன். ஒவ்வொரு அண்டத்துக்கும் ஒரு பிரம்மா, ஒரு சிவன், ஒரு இந்திரன் இருப்பார்கள். எல்லா அண்டத்தில் இருக்கும் சிவன், பிரம்மா, இந்திரன் மற்றுமுள்ள தேவர்கள், ஜீவராசிகள் எல்லாரையும் நிர்வாகம் செய்பவன் ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே உலகுக்கு எல்லாம் ஒரே பதி.

**9. சமஸ்கிருத வேதமும் தமிழ் வேதமும்**

மண்ணிலே பொன் இருப்பது போல வேதத்தில் எம்பெருமானை பற்றிய செய்தி இருக்கிறது. சமஸ்கிருத வேத ஸ்வரங்களை (உச்சரிப்பை) மாற்றியோ, பிழையாகவோ செல்லக்கூடாது. அப்படி சொன்னால் பேய் பிறவி வரும் என்பது ஸ்ரீவைஷ்ணவத்தில் அனுபவமான உண்மை. ஆனால் தமிழ் வேதமாகிய திவ்யபிரபந்தத்தை எப்படி சொன்னாலும் இன்பம் பயக்கும். வேதம் என்பது மண்குடம் போன்றது. திவ்யபிரபந்தம் பொன்குடம் கையாளும் போது தவறினால் மண்குடம் உடையும். பொன்குடம் உடையாது.

**10. ஸ்ரீதேவி, பூமிதேவி, நீளாதேவி**

ஸ்ரீமன் நாராயணனுக்கு மூன்று தேவிகள் முக்கியமானவர் ஸ்ரீதேவி, பூமாதேவி, நீளாதேவி. இவர்களில் ஸ்ரீதேவியும், நீளாதேவியும் எம்பெருமான் அவதாரம் எடுக்கும் போது தான் தானும் அவதாரம் எடுப்பார்கள். பூமாதேவி எம்பெருமான் அவதாரம் எடுக்காத காலத்திலும் அவதாரம் எடுப்பாள்.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

# உப்பு இறைவனை உணர்த்தும் ஓர் அடையாளம்



உப்பு உணவில் மட்டுமல்ல நமது ஆன்மிக வாழ்விலும் முக்கியமானது. விதையும் இல்லாமல், மண்ணுமில்லாமல் கடலில் தோன்றும் இந்த "அதிசிய விளைச்சலை" வியக்காத ஞானியரே இல்லை.

நீரில் தோன்றி, நீரிலேயே கரைந்து போகும் உப்பு ஜீவாத்மாவைப் போன்றது கடலே பரமாத்மா. "சமுத்திரமணி, நீர்ப்படிகம், கடல் தங்கம், பூமிகற்பம், சமுத்திர ஸ்வர்ணம், வருண புஷ்பம், சமுத்திரக்களி, ஜலமாணிக்கம் என்றெல்லாம் உப்பு போற்றப்படுகிறது.

சைவ சமயத்தில் "ஸ்பரிச தீட்சை" என்று ஒன்று நடைபெறும். அதாவது குருவானவர் சிஷ்யரின் தலையைத் தொட்டு மந்திர முறைகளைச் சொல்லிக் கொடுப்பார். அப்போது குரு, சிஷ்யர் ஆகிய இருவரின் உப்புத் தன்மை விகிதமும் சரியான அளவில் ஒன்றாகி வரும்போது அந்த சிஷ்யர் மிகச் சிறந்த மாணவராக விளங்குவார் என்பது ஐதீகம்.

உடலில் சேரும் உப்பே நமது அனைத்து குணநலன்களையும் தீர்மானிக்கிறது என்பது சீனர்களின் நம்பிக்கை. கடலில் நீராடுவது சகல தோஷங்களையும் நீக்கும் என்பது நம்பிக்கை. சங்கும், முத்தும் பிறப்பது உப்பால்தான். கடலில் இருந்து தோன்றிய மஹாலட்சுமியின் அம்சமாக உப்பு சொல்லப்படுவதால்தான் உப்பை சிந்தக் கூடாது, காலில் மிதிக்கக் கூடாது என்றும் சொல்வார்கள்.

இன்றும் திருஷ்டி கழிக்க உப்பு சுற்றிப்போடுவது நாடைமுறையே. உப்பு துர்சக்திகளை, கெட்ட அதிர்வுகளை விரட்டும் ஆற்றல்கொண்டது. உப்பைக் கடனாகக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அந்த இடத்திலிருந்து மஹாலட்சுமி

நீங்கி விடுவாள். மரு, வீக்கம் போன்றவை நீங்க உப்பும், மிளகையும் கொட்டி வழிபடுவதை நாம் பார்க்கிறோம்.

விடியல் நேரத்தில் இரு கைகளிலும் உப்பை வைத்துக்கொண்டு "ஸ்மரம் யோநிம் லக்ஷ்மீம்" என்ற ஆதி சங்கரரின் சௌபாக்ய மந்திரத்தை 16 முறை உச்சரித்து, அந்த உப்பைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இப்படியே 48 நாள்கள் கழித்து மொத்த உப்பையும் நீர் நிலைகளில் போட்டுவிட வேண்டும் என்று சமயப் பெரியோர்களால் சொல்லப்படுவது உண்டு.

வடமொழியில் உப்பை "லவணம்" என்பார்கள். இந்த லவணத்தைக் கொண்டு செய்யப்படும் பிரார்த்தனைகள், வடமாநிலங்களில் அநேகம் உண்டு. "ஓம் க்ருணி சூர்ய ஆதித்யோம்: மம சௌக்யம் தேகிமே ஸமா" என்று வேண்டியபடி உப்பை வைத்து சூரியனை வணங்கும் பழக்கம் இன்றும் உள்ளது.

உப்பு நெகட்டிவ் எனர்ஜியை வெளியேற்றும் சக்தி கொண்டது. கையில் உப்பை வைத்துக் கொண்டிருக்கும்போது பாசிட்டிவ் எனர்ஜி அதிகரிப்பதாகச் சொல்கிறார்கள். கிராமங்களில் "உப்பு மந்திரம்" என்று வேடிக்கையாக ஒன்றைச் சொல்வதுண்டு.

உப்பைக்கையில் வைத்துக்கொண்டு நாம் யாரைப் பார்க்க நினைக்கிறோமோ அவர்களை எண்ணி தியானித்து வீசி வேண்டினால் அவர்கள் வேண்டுதல் தொடங்கிய 7 நாட்களுக்குள் அவர்கள் உங்களைக் காண வந்துவிடுவார்கள் என்று நம்பிக்கை.

இதைத்தான் டெலிபதி ஈ.எஸ்.பி பவர் என்றெல்லாம் சொல்கிறோம். ஆக உப்பு என்பது மருத்துவம், ஆன்மிகம், நம்பிக்கை என்று எல்லா விஷயங்களிலும் நம் வாழ்க்கையில் கலந்து, ஒன்றோடு ஒன்றாகவே இருந்துவருகிறது. இனி "உப்புக்குப் பெறாத விஷயம்" என்று எதையுமே சொல்லாதீர்கள் ஏனென்றால் கடல் பரமாத்மா, உப்பு ஜீவாத்மா.

---

# ஏழு ஜென்மத்தில் செய்த பாவங்கள் நீங்க செய்ய வேண்டிய காஞ்சி மகான் பரிகாரம்

ஏழு ஜென்மத்தில் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்க பச்சரிசி சிறந்த பரிகாரம் என்று காஞ்சி மகான் அறிவுறுத்தியுள்ளார். அது குறித்து தான் இந்தப் பதிவில் காண்போம்.

தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும் நம்மையும் மீறி ஏதேனும் பாவங்களைச் செய்து விடுகிறோம். சிலர் மனதை காயப்படுத்தி, நோகடித்து விடுகிறோம்.


நம் இன்றைய பிறப்பு என்பதே கர்மா எனப்படுகிறது. இந்தப் பிறப்பு எடுத்ததற்குக் காரணமே, முந்தைய பிறவியில் செய்த வினைகளைத் தீர்ப்பதற்குத்தான் என்கிறது சாஸ்திரம். ஒருவரின் பிறப்பில், ஏழு தலைமுறை

பாவமும் சேர்ந்திருக்கும் என்றும் அறிவுறுத்துகிறது சாஸ்திரம்.

இத்தனை பாவங்களில் இருந்தும் நாம் விடுபடுவதற்கு, காஞ்சி மகா பெரியவா, அருளியுள்ள விஷயம் மிக மிக எளிதானது. "ஒருவர் ஏழு தலைமுறைக்கு முன் செய்த பாவங்களும், இந்த தலைமுறையில் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களும் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களும் என சகலமும் தீருவதற்கு ஒரு வழி இருக்கிறது.

சனிக்கிழமையன்று பச்சரிசியை ஒரு கைப்பிடி அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை நன்கு பொடியாக்கிக் கொள்ள வேண்டும். அதனை கையில் வைத்துக்கொண்டு சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும். மனதார வேண்டிக் கொண்ட பிறகு, அருகில் உள்ள விநாயகர் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

மரத்தடி விநாயகர், தெருமுனை விநாயகரை தரிசித்து பிரார்த்தனை செய்ய வேண்டும். மூன்று முறை வலம் வந்து விநாயகரைச் சுற்றிலும் பச்சரிசிப் பொடியைத் தூவிவிட வேண்டும், அந்தப் பொடியை நோக்கி எறும்புகள் வரும். வரிசையாக வந்து எறும்புகள் அதனை எடுத்துச் செல்லும். நீங்கள் போடுகிற பச்சரிசியை, பச்சரிசிப் பொடியை எறும்புகள் தூக்கிச் சென்றாலே உங்களுடைய பல பாவங்கள், நீங்கள் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் நீங்கிவிடும்.



அதுமட்டுமா?அப்படி தூக்கிச் சென்ற பச்சரிசிப் பொடியை, எறும்புகள் முழுவதுமாக சாப்பிட்டு தீர்த்துவிடாது, மழைக்காலத்திற்கு உணவு வேண்டுமே என்று தன் புற்றுக்குள் சேமித்து வைத்துக் கொள்ளும்.


பச்சரிசி கெட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றும். எறும்பின் எச்சில் பட்டதுமே அரிசி மாவு கெடும் தன்மையை இழந்துவிடுகிறது. இந்த மாவு பொடி இரண்டே கால் வருடங்கள் கெடாமல் இருக்கும். இப்படி எறும்புகள் எடுத்து வந்த பொடியை இரண்டே கால் வருடங்களாக இருக்கும் பொடியை முப்பத்து முக்கோடி தேவர்களும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டரை ஆண்டுக்கு ஒருமுறை கிரக நிலை மாறும், அப்போது அரிசிப் பொடியின் குணமும் மாறிவிடும். இதனால்தான், எறும்புக்கு அடிக்கடி பச்சரிசி பொடி இடவேண்டும் என்கிறது சாஸ்திரம். ஒரேயொரு எறும்பு நாம் இடுகிற ஒரேயொரு துளி பச்சரிசிப் பொடியைச் சாப்பிட்டால், அது நூறு அந்தணர்களுக்கு உணவிட்டதற்குச் சமம்.

மேலும் சனி பகவானின் தொல்லையில் இருந்தும் விடுபடலாம். ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டமச் சனி முதலான சனி தோஷமும் பெரிய தாக்கத்தையோ, கெடு பலனையோ உண்டாக்காது.

அதனால்தான், அரிசிமாவில் கோலமிடுவது வழக்கமாகவே இருக்கிறது. அந்த அரிசிமாவு எறும்புக்கும், பூச்சிகளுக்கும் உணவாகின்றன, என்று காஞ்சி மகான் அறிவுறுத்தியுள்ளார்.

# சொக்கப்பனை





சிவபெருமானை ஜோதி சொரூபமாக காணவே கார்த்திகை திருநாளில் சிவன், முருகன் கோவில்களில் சொக்கப்பனை கொளுத்துகின்றனர். தீபத் திருநாள் அன்று அதிகாலையில், கோவிலில் பரணி தீபம் ஏற்றுவார்கள். மாலை வேளையில் மலையுடன் இருக்கும் கோவில்களில் மலை முகடுகளிலும், கோவில் கோபுரங்களிலும் மகா தீபம் ஏற்றுவார்கள். வீடுகளிலும் அகல் விளக்குகளும், வம்சா வழியாக வரும் பாரம்பரிய விளக்குகளையும் ஏற்றுவார்கள். இதே போல மற்றொரு வழிபாடும் உண்டு. அது தான் "சொக்கப்பனை வைபவம்", சகல ஆலயங்களிலும் சொக்கப்பனை வைபவம் மிக விமர்சையாக கொண்டாடப்படும்.

"கார்த்திகை விளக்கீடு" என இலக்கியங்கள் போற்றும் தீபத் திருவிழாவில் பனை மரங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. அவ்வாறு முக்கியத்துவம் பெற காரணம் பனை மரத்தின் அனைத்து பாகங்களும் பனை ஓலை-கூரை வேய, ஓலையின் அடிக்காம்புகள்-நார் எடுக்க, பழங்கள் - நுங்கு உணவாக, பனை மரத்தின் பாளையை வெட்டினால் - பதநீர் என நமக்கு பயன்படுவதால் பூலோக கற்பக விருட்சம் என்றும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

பனை மரம் மருத்துவ குணம் நிறைந்ததாகும், பனை ஓலையை எரிப்பதால் ஏற்படும் புகையில் மனிதனுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, விஷப் பூச்சிகளை கொல்லும் ஒரு வித நச்சுத் தன்மை இருப்பதால் கார்த்திகை தீபத்தன்று கோவிலின் முன் முற்றத்தில் பனை மரத்தினை வெட்டி நட்டு அதில் சில அடி உயரத்திற்குப் பனை ஓலைகளை கூம்பு போன்று அமைப்பார்கள். கார்த்திகை தீபத்தன்று சிவாலய கோபுர உச்சியில் தீபம் ஏற்றி பஞ்ச மூர்த்திகளுக்கு வழிபாடு நடத்துவார்கள். பின்னர் பஞ்ச மூர்த்திகளை பனை மரம் மற்றும் ஓலையால் அமைத்த சொக்கப்பனை வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்து வந்து தீபாராதனை காட்டி, அந்த தீபச் சுடரால் சொக்கப்பனையைக் கொளுத்துகிறார்கள். எரிகின்ற சொக்கப்பனை அக்கினி மய லிங்கமாகப் பக்தர்களால் வணங்கப்படுகிறது. பேச்சு வழக்கில் சொக்கப்பனை என்றும்

கூறுவார்கள். அதே சமயம் அதிலிருந்து உருவாகும் புகையால் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிகளும் இறந்து விடும். கோவில் திருவிழாக்கள் மூலம் ஆன்மீக சிந்தனையை மட்டும் வளர்க்காது நம் வாழ்விற்கு பயன்படும் பிற விஷயங்களையும் தன்னுடைய சந்ததியினர் பின்பற்றும் வகையில் வழி வகுத்தவர்கள் நம் முன்னோர்கள் என்றால் அது மிகையாகாது. சில ஊர்களில் சொக்கப்பனை எரிந்து முடிந்ததும் அதிலிருந்து பெறப்படும் கரியை தைலத்துடன் சேர்த்து இரட்சையாக, காப்பாக பூசிக் கொள்வார்கள். கிராமங்களில் சாம்பலை எடுத்து சென்று வயற்காடுகளிலும் தூவுவார்கள். இதனால் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்பது நம்பிக்கை.

திருநெல்வேலிக்கு அருகேயுள்ள உவரி அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் ஏற்றப்படும் சொக்கப்பனையே (முப்பது, முப்பந்தைந்து அடி உயரம்) தமிழகத்தில் பிரம்மாண்டமானதாகும். நாமும் நம் ஊர் கோவில்களில் நடைபெறும் சொக்கப்பனை விழாவில் கலந்து கொண்டு ஜோதி மயமான சிவனை வழிபடுவோம்.

...... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

---

# நினைத்த காரியத்தை நடத்தி தரும் ஆஞ்சநேயரின் வால்

காரியத்தடை இருப்பவர்கள் நினைத்த காரியம் நடக்க வேண்டும் என நினைப்பவர்கள் முதலில் தங்களின் குலதெய்வத்தை வழிபட்ட பிறகே அந்த காரியத்தை செய்ய துவங்க வேண்டும். அதற்கு பிறகு அவர்கள் வணங்க வேண்டிய தெய்வம் ஆஞ்சநேயர். பொதுவாக காரிய தடை ஏற்படுகிறது என்றால் அதற்கு காரணம் கிரகங்கள் சரியாக இல்லை என்பது தான் காரணமாக சொல்லப்படும். இதனால் காரிய தடை அகல ஆஞ்சநேயரை வழிபட வேண்டும். ஆஞ்சநேயருக்கு வால் வழிபாட்டினை மேற்கொள்ளலாம். ஏதாவது ஒரு நல்ல நாள் பார்த்து இந்த வழிபாட்டினை துவக்கலாம்.



ஆஞ்சநேயர் சிறு குழந்தையாக இருந்த போது தனது தாய் அஞ்சனையிடம் எனக்கு பசிக்கிறது என்றால் இப்போது நீ தருகிறாய், நீ அருகில் இல்லாத சமயத்தில் எனக்கு பசி வந்தால் நான் என்ன செய்வது என குழந்தைத்தனமாக கேட்டுள்ளார். அதற்கு அவரது தாய், பழங்களை பறித்து சாப்பிடு என பதிலளித்துள்ளார். அப்போதும் விடாமல் பழமா? அது எப்படி இருக்கும் என கேட்டுள்ளார் ஆஞ்சநேயர். அதற்கு பதிலளித்த அஞ்சனை பழம் என்றால் சிவப்பாக இருக்கும் என கூறி உள்ளார்.

ஒருநாள் அதிகாலை வேளையில் வானத்தில் பார்த்த ஆஞ்சநேயரின் கண்ணில் சிவந்திருந்த சூரியன் பட்டது. இது தான் அம்மா கூறிய பழம் போல. அது எப்படி உள்ளது என சுவைத்து பார்க்கலாம் என்று நினைத்து சூரியனை துரத்த ஆரம்பித்துள்ளார். இதனால் பதறிப் போய் சூரியனும் ஓடி உள்ளார். இதைக் கண்ட இந்திரன் தனது வஜ்ராயுதத்தால் தாக்கியதால் ஆஞ்சநேயருக்கு

கன்னத்தில் காயம் ஏற்பட்டது. இதனால் தான் அவருக்கு அனுமன் என்ற பெயர் வந்தது. இந்திரனின் இந்த செயலால் கோபம் கொண்ட வாயு தேவன் தனது செயல்களை சுருக்கிக் கொண்டார். பிறகு அனைத்து தேவர்களும் வந்து அவரை சமாதானம் செய்துள்ளனர்.

அனுமனுக்கு நிறைய கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இதனால் ஞானத்தில் சிறந்தவரான சூரியனிடம் கல்வி கற்க சென்றார். இந்த முறை மிக பணிவாக சென்று சூரியனிடம் கல்வி கற்றுத் தர வேண்டும் எனக் கேட்டார். அதற்கு சூரிய பகவானோ, நான் ஒரு இடத்தில் இருக்க மாட்டேன். நான் போகிற போக்கிற்கு என்னுடன் வந்தால் கற்றுத் தருகிறேன் என்றார். அனுமன் வாயு புத்திரன் என்பதால் சூரியன் போகும் வேகத்திற்கு ஈடு கொடுத்து சென்றார். அப்படி அவர் செல்லும் போது அவர் வாலின் பின்னாலேயே நவகிரகங்களும் வர துவங்கி விட்டன. நவகிரகங்களின் பாதிப்புக்களில் இருந்து மீள அனுமனின் வாலை வழிபட்டாலே போதும்.

அனுமன் படத்திற்கு துளசி மாலை அல்லது வெற்றிலை மாலை கட்டி சாற்ற வேண்டும். அனுமனின் வால் துவங்குகிற இடத்தில் சந்தனத்தால் ஒரு பொட்டு வைக்க வேண்டும். ஸ்ரீராம ஜெயம் என சொல்லிக் கொண்டே சந்தன பொட்டு வைத்து அதன் மீது குங்குமத்தால் ஒரு பொட்டு வைக்க வேண்டும். இதே போல் தினம் ஒரு பொட்டு வீதம் 48 நாட்கள் வாலின் நுனி வரை வைக்க வேண்டும். வாலின் அடி துவங்கி நுனி வருவதற்குள் நாம் என்ன காரியத்தை நினைத்து வழிபட்டோமோ அந்த காரியம் நடந்து விடும்.

**அனுமன் மந்திரம் :**

அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான், அவன் எம்மை அளித்துக் காப்பான்


---

# மூன்று வகை தவம்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுகிறார்

**வாக்கினால் செய்யும் தவம்**

நாம் பிறர் மனத்தைப் புண்படுத்தாது இருப்பது,
பேச்சு உண்மை, இனிமை, நன்மை அளிப்பதாக இருப்பது.



**மனத்தால் செய்யும் தவம்**

அமைதியில் இருக்கும் தெளிந்த மனம்,
அன்புள்ளம், மௌனம் அடங்கிய மனம்.

**செயலால் செய்யும் தவம்**

தெய்வங்களை பூஜித்தல், சான்றோரை பூஜித்தல்,
குருவை பூஜித்தல், புலனடக்கம், அகிம்சை ஆகியவை.

# சீதை ஏன் சிறைப்பட்டாள்?

இலங்கையை விட்டுக் கிளம்பும் முன்பு ராமர் சீதைக்கு லங்காபுரியைச் சுற்றிக்காட்டுகிறார். "சீதா, இந்த இடத்தில்தான் கும்பகர்ணன் அழிந்தான், இங்கு தான் ராவணனைக் கொன்றேன், இங்கே தான் இந்திரஜித்தை லட்சுமணன் கொன்றான் என்றவர்.



"சரி ஒருமுறை இந்த இலங்கையை உனது கண்களால் பார்" என்றார். "அதைத்தானே இத்தனை நாளும் செய்துகொண்டிருந்தேன். இவ்வளவு காலமும் இங்கேதானே இருந்தேன்? என்றாள் பிராட்டி.

"நீ இங்கே இருந்ததும் உண்மை, பார்த்ததும் உண்மை. ஆனால் அது கோபப்பார்வை. இப்போது கண்குளிரப் பார். ஏனெனில் நம் பிள்ளை விபீஷணன் இனி இந்த தேசத்தை ஆளப்போகிறான். உன் கடாட்சம் இருந்தால் தான் அவனால் சிறப்பாக ராஜ்ஜியம் நடத்த முடியும்" என்றார்.

உடனே பிராட்டி தனது மனதிலுள்ள மங்கள எண்ணங்களையெல்லாம் ஒன்று சேர்த்து இலங்கையை கண்குளிரக் கடாட்சித்தாள் என்கிறது வால்மீகி ராமாயணம்.

"சுக்ரீவன் விஷயத்தில் கடாட்சித்தது பிராட்டி போலவே தெரியவில்லையே" என்று சந்தேகப்படுவோர் உண்டு. இந்த சந்தேகம் பிராட்டிக்கே வந்து விட்டதாம். அவள் அனுமனிடம், "குரங்குகளுக்கும், மனுஷர்களுக்கும் எப்படி நட்பு ஏற்பட்டது? என்று கேட்டாளாம். அதாவது தனது அனுக்கிரகம் இல்லாமல், ராமபிரானின் அனுக்கிரகத்தை அவர்கள் எப்படிப் பெற்றார்கள்? என்பது அவளது சந்தேகத்துக்கான காரணம்.

அனுமன் சிரித்துக்கொண்டே பதிலளித்தார் ... "தாயே தங்கள் அனுக்கிரகம் இல்லாமல் நாங்கள் எப்படிப் பெருமாளின் கடாட்சத்தை அடைய முடியும்? தாங்கள், ராவணனால் ஆகாச மார்க்கமாக கடத்தப்பட்டபோது, உங்கள் ஆபரணங்களை மூட்டையாகக் கட்டி கீழே போட்டீர்கள் இல்லையா? நாங்கள் ரிஷ்யசிருங்க மலையில் இருந்தபோது எங்கள் கையில்தானே அவை கிடைத்தன.

அந்த ஆபரணங்கள் வழியாக தங்கள் கடாட்சம் கிடைத்த பிறகுதானே ராமபிரானின் அனுக்கிரகம் எங்களுக்குக் கிடைத்தது. தங்கள் சம்பந்தமின்றி அவர் அனுக்கிரகம் எங்களுக்கு எப்படி கிடைக்க முடியும்? என்று பதிலளித்தார்.

சீதா பிராட்டி கடத்தப்பட்டதில் இன்னொரு ஆனந்தமான விஷயம் என்னவென்றால் எல்லோரும் ராமனைச் சரணடைந்தார்கள். ஒரு ராட்சஷனையும் சரணாகதி ஆக்கத்தான் ராமனே இலங்கை வந்தார். அதற்காகத்தான் சீதா பிராட்டியும் இலங்கை சென்றதே. "பிராட்டியின் சக்தி என்ன வென்று தெரியாதவர்கள் தான் ராவண பலாத்காரத்தால் சீதா பிராட்டி கடத்தப் பட்டாள் என நினைப்பார்கள். ஆனால் ராட்சஷனையும் சரணாகதி அடையச் செய்ய சீதா பிராட்டி உருவாக்கிக்கொண்ட சந்தர்ப்பமே அது" என பெரியோர்கள் கூறுவார்கள்.

பிராட்டியின் சக்தி அபரிமிதமானது. சீதா பிராட்டி தான் ராவணனை கட்டித் தூக்கிச் சென்றாளே தவிர, ராவணன் அவளைத் தூக்கிச் செல்லவில்லை. பிராட்டி ஏன் சிறைப்பட்டாள்? தான் உள்ளே போனால்தான் மற்றவர்களுடைய சிறையை அறுத்து விட முடியும் என்பதால்தான் அவள் சிறைப்பட்டாள். சம்சாரிகள் இந்த ராவணனால் படும் துன்பத்தில் இருந்து விடுவிக்கவே வலியப் போய் சிறைப்பட்டாள்.

ஒருவன் கிணற்றில் விழுந்து விட்டான், அவனைத் தூக்கிவிட ஓரளவு ஆழத்துக்கு வேண்டுமானால் கயிறைக் கட்டி தூக்க முயற்சிக்கலாம். ஆழம் அதிகமென்றால் உள்ளே குதித்துதான் கிணற்றுக்குள் கிடப்பவனை மீட்டு வர முடியும். சீதாதேவி அதைத் தான் செய்தாள் அவளைப் பற்றினால் தான் பிறகு அவனைப் பற்ற முடியும்.

ASTROLOGY
- VASTU CONSULTANT -
PERFECT VASTU FOR
HOME FACTORY OFFICE.
MANY CLIENTS
BENEFITTED WITH VASTU
PREDICTIONS WITH US.
ONLY WITH APPOINTMENT
94441 64859

# சித்தர்களும் நீர் வளமும்



பொதுவாக சித்தர்கள் நீர் வளம் உள்ள மலைகளில் தான் வாசம் செய்து இருக்கிறார்கள். மலையில் சித்தர்கள் ஜீவ சமாதி அடைந்த இடங்களில், கண்டிப்பாக அருவியோ அல்லது நீர் ஊற்றோ இருக்கும் என்பார்கள் அது உண்மைதான். நித்ய பூஜை செய்வதற்கும், தங்கள் நித்ய கடமைகள் செய்வதற்கும் நீர் அவசியம்.

பழனியில் மலை ஏறும் போது கவனித்தால் வள்ளி சுனை என்ற வற்றாத நீர் குளம் மலையின் நடுவே யானை பாதையில் அமைந்திருக்கும். சுற்றியுள்ள மலைகளில் நீர் கிடையாது. பெரும்பாலும் பாறைகள்தான். எனவே தான் போக மகரிஷி பழனி மலையை தேர்ந்தெடுத்தார் போல.

அதே போல, அம்பாசமுத்திரம் அருகிலேயே அகத்தியர் நீர்வீழ்ச்சி மற்றும் அவர் வாழ்ந்த இடம் உள்ளது. அங்கு அகத்தியர் கோவிலும், அருகிலேயே அகன்ற பாறைகளால் சூழப்பட்ட பெரிய நீர் குளம் இருக்கிறது. சுமார் ஒரு ஏக்கர் இருக்கும். முதலில் பார்ப்பதற்கு அதன் விஸ்வரூப பரிணாமம் பிரமிப்பாக இருக்கிறது. சிறிது தொலைவிலேயே அகத்தியர் நீர் வீழ்ச்சி, தாமிரபரணி ஆற்றோடு கலக்கிறது.

திருப்பதியிலும் சுற்றிலும் மலை, நீர் வீழ்ச்சிகள் பல இருக்கும், நீர் வளம் மிகுந்த இடம். அதனால் தான் கொங்கணவ மகரிஷி தான் தவமும், ஜீவ சமாதியும் அடைய அந்த இடத்தை தேர்ந்தெடுத்தார் போல.

சேலம் அருகே 5 கி.மீ. தூரத்தில் சீலநாயக்கன்பட்டி, கபிலர் தியான குகை என்று உள்ளது. அகத்தியர், கபிலர் உள்ளிட்ட பல சித்தர்கள் தியானம் செய்த பாறை நீர் ஊற்றுடன் கூடிய அமைதியான கபிலர் தியான குகை என்று சொல்லப்படுகிறது. அங்கே பல சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டு ஸ்ரீ சக்கரம், சிவலிங்கம், நந்தி, அகத்தியர், ரிஷிபத்தினி சிற்பங்கள் உள்ளன.

# KRISHNA DELISH COFFEE




எங்களிடம் தரமான காபி
கொட்டை அரைத்து தரப்படும்

* Condition Apply

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 680 மட்டுமே

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS.15 only

COFFEE POWDER
DOOR DELIVERY FREE
ALSO AVAILABLE

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478



Mylapore
Ganapathy's
CELEBRATING
82 Years
ANNIVERSARY
Since 1942
மயிலாப்பூர்
கணபதிஸ்
ஸ்தாபிதம் 1942
வெண்ணெய் & நெய்
பாரம்பரியமாக 1942 முதல்
ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்
மயிலாப்பூர் கிளை :
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272
மேற்கு மாம்பலம் கிளை :
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363
கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com